## கோயமுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயமுத்தூர்

## Probate OP No.297/2019

PW-1

2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ஆம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திருமதி ஜி.விஜயா, B.A.,M.L., PGDCFS முதன்மை மாவட்ட நீதிபதி, கோயமுத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | ஈஸ்வரன் |
| தந்தை பெயர் | |
| வயது | |
| முகவரி | |

**முதல் விசாரணை**

நான் அசல் மனுவில் மனுதாரர் ஆவேன். ம.சா. 1 ஆக எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாகத் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேலும் எனது சாட்சியத்தை உறுதிபடுத்துவதற்காக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 07.09.2004 தேதியிட்ட உயிலின் அசல் ம.சா.ஆ.1.
2. 13.04.2005 தேதியிட்ட எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழின் அசல் ம.சா.ஆ.2.
3. 10.12.2009 தேதியிட்ட வாரிசு சான்றிதழின் அசல் ம.சா.ஆ.3.
4. 20.02.2013 தேதியிட்ட சொத்து வரி ரசீது அசல் ம.சா.ஆ.4.
5. 24.05.2013 தேதியிட்ட குடிநீர் கட்டண ரசீது அசல் ம.சா.ஆ.5.
6. 27.02.1985 தேதியிட்ட எனது தந்தை பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் புகைப்பட நகல் ம.சா.ஆ.6.
7. OS No.2253/2013 ன் பிராதின் அசல் ம.சா.ஆ.7.
8. OS No.2253/2013 ல் ஏற்பட்ட 09.04.2019 தேதியிட்ட தீர்ப்பு ம.சா.ஆ.8.
9. 22.06.2015 தேதியிட்ட எனது தாயார் ருக்மணியின் இறப்பு சான்றிதழின் அசல் ம.சா.ஆ.9.

10. 28.06.2013 தேதியிட்ட தமிழ்நாடு காவல் துறையால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அசல் ம.சா.ஆ.10.

11. 08.02.2002 தேதியிட்ட தமிழ்நாடு காவல் துறையால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அசல் ம.சா.ஆ.11.

**ம.சா.ஆ.7 மற்றும் 8ன் அசல் மனுதாரரிடம் எவ்வாறு வந்தது என்று தற்போது அவரால் சரியாக குறிப்பிட்டு கூற இயலவில்லை.**

**எதிர்மனுதாரர் தரப்பில் யாரும் ஆஜர் ஆகாத காரணத்தினால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம்/ஜி.விஜயா,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கோயமுத்தூர்.